## துறையூர் நகராட்சி

2018 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 04.10.2018ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை : திரு. வே. நவேந்திரன்,
தனி அலுவலர்

---

**பொருள் எண்.:01.**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர்,அவர்களின் ந.க.எண்.3773/2017/அ2 ன் செயல் முறைகளின் படி துறையூர் நகராட்சி அண்ணாபேருந்து நிலையம் பழையநகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள புதிய கடைகள் 25 க்கான சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு எண் W.P(M.D) 11447/2017, தீர்ப்பு நாள்/10.08.2018, S,R,No .2615/2018 வழக்கின் முடிவிற்குட்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர்,அவர்களால் மறு ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். உத்தரவிடப்பட்டதற்கிணங்க 26.10.2018ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் நடப்பட்டயுள்ளது. ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் நடைபெறும் நிகல்வுகளை வீடியோ கேமர மூலம் பதிவி செய்து அதன் பதிவை குறும் தகட்டில் பதிவு செய்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் வழக்கிற்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. வீடியோ பதிவுக்கான உத்தேசசெலவினைம் ரூ.50,000/—வழங்கவும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைப்பெற்ற நிகல்வுகளை வீடியா கேமராபதிவின் மூலம் பதிவு செய்து அதனை குறும் தகட்டில் பதிவு செய்து வழங்க விலைப்புள்ளி கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

அதன் விபரம்

| வ.எண் | வீடியோ கேமரா ஸ்டியோ கடையின் விபரம் | ஒரு வீடியோ கேமராக்கு நாள் ஒன்றுக்கு வாடகை மற்றும் பதிவினை குந்தகட்டில் பதிவு செய்து வழங்கும் செலவினத்தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கணபதி ஸ்டியோ துறையூர் | 8500/— |
| 2 | ரிசி ஸ்டியோ துறையூர் | 8000/— |
| 3 | சங்கர் போட்டோ(ம) வீடியோ துறையூர் | 9000/— |

வரப்பெற்ற விலைப்புள்ளியில் ரிசி டிசல் ஸ்டியோ,துறையூர் விலைப்பள்ளியானது மற்ற வரப்பெற்ற விலைப்புள்ளியை காட்டிலும் குறைவாக உள்ளதால் இந்த ஸ்டியோவில் மேற்கானும் பணியை ஒப்படைத்து பணியை முடித்து பெறலாம்.இதற்கான செலவினைத்தையும் செய்து கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.2597/2018/அ1)**

அலுவலகக்குறிப்பு.

1.மன்றம் அனுமதிவழங்கலாம்.

2.மேற்காணும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியிருந்து

செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

<u>பொருள் எண்.:02.</u>

துறையூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் (TURIP 2018–19)–ன் கீழ் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.388 நாள்.11.05.2018ல் அனுமதி வழங்கியதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.12981/2018/இ3 நாள்.10.08.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 20.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. K. சரவணன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 2.41% அதிகம் |
| 2 | திரு. K. சுரேஷ், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டின் அளவிற்கே வழங்கப்பட்டுள்ளது. |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2ல் உள்ள திரு. K. சுரேஷ், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டன் அளவிற்கே இருப்பதால், இவ்வலுவலக கடிதம் நாள் 29.09.2018 வாயிலாக Negotiation கடிதம் வழங்கி மதிப்பீட்டை விட குறைவாக வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டது. இதில ஒப்பந்ததாரர் திரு. K. சுரேஷ், அவர்களின் 22.10.2018 தேதிய கடிதத்தில மதிப்பீட்டை விட 0.10% விலை குறைப்பு செய து சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே ஒப்பந்ததாரர் திரு. K.சுரேஷ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 2074/2018/இ1)

**அலுவலக குறிப்பு..**

திரு. K. சுரேஷ் ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டை விட 0.10% விலை குறைப்பு செய்து வழங்கியதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.:03.</u>

இந்நகராட்சியில் 2017–18ம் ஆண்டில் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி தொகையினை அரசு தலைப்பில் செலுத்தப்பட்டது. அவ்வாறு செலுத்தப்பட்ட தொகைக்கு நகராட்சியில் E-TDS Retur Filing Online மூலம் செய்யும் பணியை

Alayam Associates Trichy நிறுவனம் மூலம் செய்து முடிக்கப்பட்டு 2017–18ம் ஆண்டுக்கு உரிய படிவம் 16 பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் வருமான வரி தொடர்பான விசாரணையிலும் நகராட்சி சார்பாக மேற்படி நிறுவனம் ஆஜராகி வந்தது. ஆதலால் TDS Return E-Filing Upload Fees, Data Processing and Downloading Charges கட்டணமாக ரூ.19200/– வழங்க கேட்டுக்கொண்டுள்ளது. ஆதலால் மேற்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி செலவினம் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி பொது நிதியில் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.